1974 ஏப்ரல் 10]

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, தற்பொழுது அந்த அளவுக்கு நெருக்கடி நிலை இன்னும் ஏற்படவில்லை. இப்பொழுது, அவரவர்களுடைய கிணறுகளைப் பழுது பார்த்து வைத்துக்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருக்கிறது. அதற்கு மேற்பட்ட நிலை ஏற்படுமானால், அதுபற்றி யோசிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, திருவாளர்கள் பொம்மன், எட்மண்ட், லத்திப், முனு ஆதி ஆகியோர் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வருவார்கள்.

**(ஆ) நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தைச் சேர்ந்த ஆறு தொழிற் சங்கங்கள் வேலைநிறுத்த அறிக்கை கொடுத்திருப்பது குறித்து.**

(முற்பகல் 10.30)

THIRU K. H. BOMMAN : Sir, I call the attention of the Hon. Minister for Labour to a matter of urgent public importance, viz., the strike notice given by about six labour unions of the Neyveli Lignite Corporation and the consequences arising out of such notice posing a great disturbance to the industrial peace and the production there.

THIRU M. A. LATHEEF : Sir, I call the attention of the Hon. Minister for Labour to a matter of urgent public importance, viz., the strike notice given by about six labour unions of the Neyveli Lignite Corporation and the consequence arising out of such notice posing a great disturbance to the industrial peace and the production there.

THIRU MUNU ADHI : Sir, I call the attention of the Hon. Minister for Labour to a matter of urgent public importance, viz., the strike notice given by about six labour unions of the Neyveli Lignite Corporation and the consequences arising out of such notice posing a great disturbance to the industrial peace and the production there.

**மாண்புமிகு திரு. க. ராசாராம்:** தலைவரவர்களே, 21—3—1974 நாளது கடிதத்தில் நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தின் நிர்வாகத்தினர் அதன் தொழிலாளர்கள் 8—4—1974 அன்றுவது

அல்லது அதன் பின்னர் ஏதாவது ஒரு நாளில் 118 கோரிக்கைகள் குறித்து வேலைநிறுத்தம் செய்ய இருப்பதாகக் கீழ்க்கண்ட ஆறு சங்கங்களால் விடுக்கப்பட்ட வேலைநிறுத்த அறிக்கையைப் பற்றிக் குறிப்பிட்டனர்.

1. நெய்வேலி நிலக்கரி நிறுவன ஊழியர் முன்னேற்றச் சங்கம்.

2. நிலக்கரிச் சுரங்க தேசியத் தொழிலாளர் சங்கம்.

3. அண்ணா ஊழியர் பணியாளர் சங்கம்.

4. நெய்வேலி நிலக்கரி நிறுவன தொழிலாளர் சங்கம்.

5. நெய்வேலி நிலக்கரி நிறுவன தொழிலாளர் பணியாளர் சங்கம்.

6. நெய்வேலி நிலக்கரி நிறுவன கூட்டுறவுத் தொழிலாளர் சங்கம்.

நெய்வேலி நிலக்கரி நிறுவன கூட்டுறவுத் தொழிலாளர் சங்கத்தினரைத் தவிர மற்ற ஐந்து சங்கங்களால் விடுக்கப்பட்ட வேலைநிறுத்த அறிக்கை தொழிலாளர் நல இலாக்காவில் பெறப் பட்டது. 25—3—1974 அன்று சென்னை தொழிலாளர் நலத் துறை இணை ஆணையாளர் சமரசப் பேச்சுவார்த்தை நடத்தினார். நிர்வாகத்தின் பிரதிநிதிகளும் மேற்கூறப்பட்ட ஆறு சங்கத் தினரும் சமரச பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டனர். மேலும் சமரசப் பேச்சுவார்த்தைகள் சென்னை இணைத் தொழிலாளர் ஆணையர் முன்பாக தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

**திரு. எம். ஏ. லத்தீப்:** தலைவரவர்களே, இந்தப் பேச்சு வார்த்தைகள் வெற்றிபெறவில்லை என்றும், இது மீண்டும் ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறதென்றும் நேற்று பத்திரிகைகளில் செய்தி வந்தது. இந்தப் பேச்சுவார்த்தைகளை முனைப்புடன் நடத்தி, நோட்டீஸ் கொடுத்து அவர்கள் வேலைநிறுத்தம் செய்கிறோம் என்ற நோட்டீசை அமல் படுத்துவதற்கு முன்னால் சுமுகமான முறையில் தொழிலாளர்களின் கோரிக்கைகளை ஏற்கின்ற அளவில்

பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு உடனடியாக ஒரு சமாசத்திற்கு அரசு ஏற்பாடு செய்யுமா? அதிலே அமைச்சரவர்கள் தலையிட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, நெய்வேலி நிலக்கரித் தொழிலாளர்கள் 118 கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். இணை ஆணையர் அவர்கள் பரிசீலித்து இன்று ஆணையர் அவர்கள் காலையில் பேசியிருக்கிறார்கள். காலையில் சுமுகமான முடிவு வராவிட்டால் மத்தியானம் நான் உட்கார்ந்து பேசுவதாக இருக்கிறேன்.

**திரு. முனு ஆதி:** தலைவரவர்களே, 16-ஆம் தேதியிலிருந்து வேலை நிறுத்தம் செய்யப்போவதாக நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். அங்கே இப்பொழுதே மத்திய சர்க்கார் போலீசையும், மாநில சர்க்கார் போலீசையும் நிறுத்தி பீதி உண்டாக்கும் விதத்தில் செய்திருப்பதால் வெற்றி பெறுதோ என்று அவர்கள் ஐயப்படுகிறார்கள். மத்திய சர்க்காரின் பொறுப்பிலே இருக்கின்ற திருச்சி பாய்லர் பேக்டரியில் அடிப்படைச் சம்பளம் 318 ரூபாய் தருகிறார்கள். ஆனால் இங்கு 295 ரூபாய் 296 ரூபாய்க்குமேல் தரமாட்டேன் என்று பிடிவாதமாக இருக்கிறார்கள். இந்த உண்மையைத் தெரிந்துகொண்டு ஓரே மத்திய சர்க்கார் தொழிலாளிக்கு அங்கே 318 ரூபாய் அடிப்படைச் சம்பளம்—அது கூடச் குறைவுதான்—இங்கே 296 ரூபாய்க்கு மேல் இல்லை என்று பிடிவாதமாக இருக்கிறார்கள். நெய்வேலி வட்டாரத்திலிருக்கின்ற போலீஸ் பந்தோபஸ்தைப் பார்க்கும்பொழுது வேலைநிறுத்தத்தின் விளைவுகள் ஆபத்தாக இருக்குமோ என்று ஐயம் ஏற்படுகிறது. எனவே அமைச்சரவர்கள் தலையிட்டு அதற்கான புள்ளிவிவரங்களை எடுத்து ஆவன செய்ய முயற்சிப்பார்களா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, தொழிலாளர்கள் 395 ரூபாய் கேட்டார்கள். அவர்களும் இறங்கி வந்திருக்கிறார்கள், நிர்வாகத்தினரும் கீழேயிருந்து மேலே வந்திருக்கிறார்கள். இருவரையும் இணைக்கும் வேலையை மேற்கொண்

டிருக்கிறார்கள். பேச்சுவார்த்தையில் இருப்பதால் மேற்கொண்டும் பல விளக்கங்களைத் தருவது சரியாக இருக்காது என்று நினைக்கிறேன்.

## (4) அறிவிப்புகள்

### விதிக் குழுவிற்கு நியமனம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஒரு அறிவிப்பு. தமிழ் நாடு சட்டப்பேரவை, 229 (1)வது விதியின்கீழ் 1974-75-ம் ஆண்டுக்கு, பின்வரும் உறுப்பினர்களை நடைமுறை விதிக் குழுவின் (Committee on Rules) உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன் :—

1. மாண்புமிகு முதல் அமைச்சர்.
2. மாண்புமிகு பேரவை முன்னவர்.
3. மாண்புமிகு திரு. செ. மாதவன், தொழில் துறை அமைச்சர்.
4. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.
5. திரு. து. ப. அழகமுத்து, அரசுத் தலைமைக் கொறடா.
6. திரு. வா. மை. அப்துல் ஜப்பார்.
7. திரு. மணலி சி. கந்தசாமி.
8. திரு. கே. கந்தசாமி.
9. திரு. கே. என். குமாரசாமி.
10. திரு. ச. சங்குமுத்துத் தேவர்.
11. திரு. ஏ. ஆர். சுப்பையா.
12. திரு. கே. டி. கே. தங்கமணி
13. திரு. இ. எஸ். தியாகராசன்.
14. திரு. வை. பாலசுந்தரம்.
15. டாக்டர் எச். வி. ஹண்டே.
16. திரு. பி. வெங்கடசாமி.

பேரவைத் தலைவர் அவர்கள் அலுவல் காரணமாகக் குழுவின் தலைவர் ஆவார்.